வெகுநேரமாகிவிட்டது. நீங்கள் அவற்றையெல்லாம் பேச முடியாது. (குறுக்கீடு) திரு. அன்பழகன், உட்காருங்கள். (குறுக்கீடு) இன்று கடைசி நாள் அல்ல. இன்னும் நிறைய நாட்கள் இருக்கின்றன, அப்போது எடுத்துக்கொள்ளலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

(ஈ) திருக்கோவிலூர் தொகுதி, வெள்ளம்புத்தூர் கிராமம், மர்ம நபர்கள் தாக்கி உயிரிழந்த சிறுவனுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெள்ளம்புத்தூர் கிராமத்தில் நடைபெற்ற ஒரு சம்பவம் குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திகேயன், மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதாமணி ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக நான் எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, ஒரே நிமிடத்தில் அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் தொகுதியில், வெள்ளம்புத்தூர் கிராமத்தில் 21-2-2018 அன்று இரவு ஆதி திராவிடர் குடியிருப்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேரை மர்ம நபர்கள் தாக்கியதில் சமயன் என்ற சிறுவன் இறந்துவிட்டான்; அச்சிறுவனுடைய தாய் அழகாயி, சகோதரி தனம் ஆகியோர் பலத்த காயத்துடன் JIPMER மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம், மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு வந்ததற்குப் பிறகு, அவரும் ரூ.1 இலட்சம் வழங்கியிருக்கிறார். ஆனால், இன்னும் காவல் துறையால் துரித நடவடிக்கை எடுக்க முடியவில்லை. காவல் துறையினரே, இந்த வழக்கை CBI வசம் ஒப்படையுங்கள் என்று சொல்வதாக நான் கேள்விப்பட்டேன். எனவே, இவ்வழக்கை CBI வசம் ஒப்படைக்கவும், இழப்பீட்டுத் தொகையை உயர்த்தித் தருமாறும் கேட்டு தங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

2018 மார்ச் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம், வெள்ளாம்புத்தூர் கிராமத்தில் திருமதி ஆராயி என்பவரும், எட்டாம் வகுப்புப் படிக்கும் அவரது மகள் செல்வி தனம் மற்றும் நான்காம் வகுப்பு படிக்கும் அவரது மகன் செல்வன் சமயன் ஆகியோரும் 22-2-2018 அன்று காலை வீட்டிலிருந்து வெளியே வராத காரணத்தினால், சந்தேகமடைந்த திருமதி ஆராயி அவர்களின் உறவினர் திரு. காசி என்பவர் வீட்டிற்குள் சென்று பார்த்தபோது, திருமதி ஆராயி மற்றும் அவரது இரண்டு குழந்தைகள் ரத்தக் காயத்துடன் கிடப்பதைப் பார்த்துள்ளார். அவர்களுள் சிறுவன் சமயன் இறந்து கிடந்துள்ளான். உடனடியாக திரு. காசி, காயம் அடைந்த இருவரையும் திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சைக்காக அனுமதித்துள்ளார். பின்னர், அவர்கள் இருவரும் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காகக் கொண்டுசெல்லப்பட்டு, அங்கு தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். இச்சம்பவம் தொடர்பாக, திரு. காசி அவர்கள் அளித்த புகாரின்பேரில், அரகண்டநல்லூர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, தடயவியல் பிரிவினர், விரல்ரேகை நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் பிரிவினர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வரவழைக்கப்பட்டு, தடயங்கள் சேகரிக்கப்பட்டன. இந்தத் துயரச் சம்பவம் குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு, துரிதமாகக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, சட்டத்தின்முன் நிறுத்தி, தண்டனைபெற்றுத் தருமாறு காவல் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன். இதன்பேரில், காவல் துறையினர் நான்கு தனிப்படைகள் அமைத்து, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து கைது செய்ய தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தத் துயர சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் சமயன் குடும்பத்திற்கு ரூ.2 இலட்சமும், காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவரும் திருமதி ஆராயி மற்றும் செல்வி தனம் ஆகியோருக்கு தலா ரூ.50 ஆயிரமும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நிவாரணத் தொகை போதவில்லை, இதை*

உயர்த்தி வழங்கவேண்டுமென்று கேட்டிருக்கின்றார். அதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) சென்னையில் கொசுக்களின் உற்பத்தியைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை, கொசுக்கள் உற்பத்தியைத் தடுப்பதன் அவசியம் குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் ஆகியோர் விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அசந்தால் ஆளையே தூக்கும் அளவிற்கு கொசுக்களின் ஆதிக்கம் சென்னையில் கொடிகட்டிப் பறக்கிறது. அரை நூற்றாண்டிற்கு முன்னால் வரட்டிப் புகைக்கு அசைந்த கொசு, பிறகு நொச்சி இலைக்கு மாறியது. பிறகு டார்டாய்ஸ் கொசு வர்த்திக்கு மாறியது. பிறகு ஓடோமாசுக்கு மாறியது. பிறகு mat-டிற்கு மாறியது. இப்போது மின்சக்தி பாய்ச்சப்பட்ட bat-டிற்கு வந்திருக்கிறது. ஆக, கொசுக்களின் வீரியம் என்பது கூடிக்கொண்டே போய்க்கொண்டிருக்கிறது. கொசு மருந்து அடிப்பதாலோ, புகை மருந்து அடிப்பதாலோ Abate போன்ற மருந்துகளை நீர்நிலைகளில் தெளிப்பதாலோ, மடிந்து கொண்டிருந்த கொசு, இப்போது கொஞ்சம் கொஞ்சமாக அதன் வீரிய சக்தி அதிகமாவதன் காரணமாக சென்னையையே ஆக்கிரமிக்கத் தொடங்கி, சென்னையைப் பெரிய அளவில் பாதிப்புக்குள்ளாக்கியிருக்கிறது. வணக்கத்திற்குரிய மேயராக எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இருந்தபோதும், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோதும், சென்னையில் இருக்கிற இரண்டு மிகப் பெரிய நீர்நிலைகள் கூவம் ஆறு, அடையாறு ஆகியவற்றின் முகத்துவாரங்கள் தூய்மைப்படுத்தப்பட்டு, கடல் நீர் அதனுள்ளே பாய்ச்சப்படும். அப்போது கொசு முட்டைகள் எல்லாம் உப்பு நீர் பாய்ச்சப்படுவதால் இல்லாமல் போய்விடும். அதோடுமட்டுமல்லாமல், நல்ல நீரில் உருவாகிற Larva நிலையிலேயே கொசுக்கள் Gambusia மீன்களின்மூலம் அழிக்கப்பட்டு வந்தன. அதோடுமட்டுமல்லாமல், இன்றைக்கு ஏறத்தாழ 1,894 கிலோ மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால்கள் இருக்கின்றன. கூவம் ஆறு, ஓட்டேரி நல்லா, கேப்டன்